அசல்

11.3.35. K. Muthukumara Swamypillai

அசல் -1

Replied 16.3.35

Sengundha Bilingual School.
Thirunelvely East
~~CHUNNAKAM.~~

K. MUTHUKUMARASWAMY PILLAI. B.A.
Hd. Master.

11 . 3 . 1935

அன்புடைய ஐயா!

நமது வித்தியாசாலைக் கல்விக் கழகத்தில் தங்களது 80ம் ஆண்டுப் பூர்த்திவிழா சென்ற புதன் கிழமை சாயந்தரம் 4 மணியளவில் சிறப்புற நடைபெற்றது. தங்கள் ஜீவியசரித்திரம் எம்மால் விரித்துரைக்கப் பெற்றது. ஆசிரியரும் மாணவரும் ஒருமித்துப் பின்வரும் நிர்ணயத்தை சபையில் நிறைவேற்றி அதைத் தங்களுக்குச் சமர்ப்பிக்கவேண்டுமாறு எம்மைப் பணித்தனர்.

<u>நிர்ணயம்</u>

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் சென்ற ஐம்பது ஆண்டுகளாகத் தமிழ் மொழிக்கு ஆற்றிவரும் ஒப்புயர்வற்ற அரும் பெருந் தொண்டைப் பாராட்டுவதோடு மேலும் இவ்வரிய தொண்டிற் பல்லாண்டு ஈடுபட்டு உழைக்க அருள்புரியுமாறு இக்கழகம் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றது"

மாணவர்கள் தங்கள் மீது கொண்டிருக்கும்

அசல்

11.3.35. K. Muthukumara Swamypillai

அசல் -1

அன்பின் கையுறை இது வெயாதலால்
இதை அன்புடன் அங்கீகரிக்குமாறு
வேண்டிக் கொள்ளுகிறேன்

இங்ஙனம்
தங்கள் அன்புள்ள
கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை
President
Senguntha Bilingual Literary Assn
Tinnevelly East

2852

31